## கவிதைப் போட்டி -5

## நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (12)

புதிய வரலாறு படைக்க உலகிலே
பெற்றவர்கள் கண்டிப்பதில்லை
ஆசிரியர்கள் தண்டிப்பதில்லை.....!
நண்பர்கள் நல்வழிப்படுத்துவதில்லை
சமூகமோ கண்டு சொல்வதும் இல்லை...
பள்ளிச் சீருடை கண்டும்
மது விற்கும் மடைவர்கள்
அரைகுறை ஆடையும் ஆபாசப்படமும்
மீசை அரும்பும் முன் காலத்தை துÀண்ட....
யாரை நம்பி நீ பிறந்தாய்?
யாருக்காக காத்திருக்கின்றாய்?
இலவசம் பெறுவதை நிறுத்திவிட்டு
தமிழகத்தை தமிழனோ தமிழச்சியோ ஆள...
பழைமையான தமிழ்மொழியோ இந்தியாவின் ஆட்சி மொழியாக!
சாதி ஒழிய மொழி இன்பற்று வளரவோ!
இலங்கை தமிழர்களது வாழ்விலோ!
சமாதானமும் மகிழ்ச்சியும் ஏற்பட.....
மனிதர்களிடத்திலே அன்பு பெருக வேண்டும்!
பாலுக்காக அழுகின்ற குழந்தை
இருக்கும் வரை
நீங்கள் படைக்கும் எந்த பாலும்
ஜீரணிக்காது இறைவனுக்கு!

*************